# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,

# METTUPALAYAM

# DEPOSITION OF WITNESS

# O.S.2/2023

# CNR.No.TNCB19000

Date:18.03.2025 PW1

| பெயர் | பழனிச்சாமி | வயது | 75 |
|---|---|---|---|
| த/பெ | மாரன் | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | சம்பரவள்ளிபுதூர் | மாவட்டம் | மேட்டுப்பாளையம் |
| | | தொழில் | |

The witness swearned under oaths Act 1969 on this the day of 18th March 2025

வா..சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

6 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

நஞ்சுக்குட்டி இறப்பிற்கு பின்னிட்டு அவருடைய வாரிசுகளான 6 முதல் 8 பிரதிவாதிகள் தாவா சொத்தில் தற்போது சுவாதீனத்தில் இருந்து வருகிறார்கள் என்று சொன்னால் சரிதான். எனது சகோதரர் சுப்பன் என்பவரை விசாரித்தால் எனது தந்தை மாரன் என்பவர் யார் யாருக்கு எவ்வளவு சொத்து பிரித்து கொடுத்தார்கள் என்ற விபரம் தெரியும் என்று சொன்னால் சரிதான். 2 முதல் 5 பிரதிவாதிகள் எனது சகோதரர் பொன்னுசாமியின் வாரிசுகள் என்றால் சரிதான். அவர்களை அழைத்து விசாரித்தால் ஆதியில் யார் யாருக்கு எவ்வளவு பாகம் பிரித்து கொடுக்கப்பட்ட விபரம் தெரியும் என்று சொன்னால் சரிதான்,

இந்த வழக்கு இல்லாமல் நஞ்சுக்குட்டியின் வாரிசுகளுக்கும் எனக்கும் வேறு வழக்குகள் நிலுவையில் இருந்து வருகிறது என்றால் இல்லை. எனது தகப்பனாரும் அவரது சகோதரரும் பாகம் பிரிக்கும்போது நில அளவை வைத்து பாகம் பிரித்துக் கொண்ட விபரம் தெரியுமா என்றால் நில அளவை வைத்து பிரிக்கவில்லை. தோராயமாக பிரித்துக் கொண்டார்கள். எனக்கும் எனது சகோதரர் நஞ்சுக்குட்டிக்கும் பூமியில் பிரிக்கப்பட்ட எல்லை குறித்து யார் யாருக்கு எவ்வளவு என்பது குறித்து பிரச்சினை இருந்து வந்தது என்றால் இல்லை. 04.01.2010 தேதியில் நஞ்சுக்குட்டி நில

அளவையரை வைத்து அளந்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு நில அளவையர் நிலத்தை அளந்து அவரவர்கள் பத்திரப்படி தீர்வு கண்டுகொள்ளுங்கள் என்று எழுதி கொடுத்து விட்டு சென்றார் என்றால் இல்லை.

நஞ்சுக்குட்டி உயிரோடு இருந்த காலத்தில் க.சண். 805/6 பூமியில் சுவாதீனத்திலும் அனுபவத்திலும் இருந்து வந்தார் என்றால் 50 செண்ட் மட்டும் அனுபவத்தில் இருந்தார். மீதமுள்ள பூமியில் யார் அனுபவத்தில் இருந்து வந்தார்கள் என்றால் எனது அப்பாவின் அனுபவத்தில் இருந்தது. நஞ்சுக்குட்டி இறப்பதற்கு முன்பாக எனது தகப்பனார் இறந்து விட்டார் என்றால் சரிதான். எனது பிராதில் சொல்லியுள்ளவாறு க.ச.எண்.805/6 ல் 4.53 ஏக்கர் பூமியானது வாதிகளாகிய நான் மற்றும் பிரதிவாதிகளின் கூட்டு அனுபவத்தில் இருந்ததில்லை என்றால் சரியல்ல. நஞ்சுக்குட்டியின் தனிப்பட்ட சுவாதீனத்தில் 4.53 ஏக்கர் அனுபவத்தில் இருந்தது என்றும் மேற்படி நஞ்சுக்குட்டி இறந்த பின்பு 6 முதல் 8 பிரதிவாதிகளின் அனுபவத்திலும் சுவாதீனத்திலும் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல.

நஞ்சுக்குட்டி உயிருடன் இருந்த காலத்தில் 01.09.2022 ம் தேதி 6 முதல் 8 பிரதிவாதிகளான அவருடைய வாரிசுகளுக்கு தான செட்டில்மெண்ட் எழுதி கொடுத்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இந்த விபரம் என்னுடைய சகோதரர் சுப்பன் மற்றும் பொன்னுசாமியின் வாரிசுகளுக்கு தெரியும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த தானசெட்டில்மெண்ட் குறித்து சுப்பனோ அல்லது பொன்னுசாமியின் வாரிசுகளோ ஆட்சேபணை தெரிவிக்கவில்லையென்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1 முதல் 5 பிரதிவாதிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையாகாததால் ஒருதலைபட்சமாகிவிட்ட விபரம் தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

எனது சகோதரர் சுப்பன் மற்றும் பொன்னுசாமியின் வாரிசுகளான 2 முதல் 5 பிரதிவாதிகளும் தான செட்டில்மெண்ட் குறித்து எந்தவிதமான ஆட்சேபணையும் செய்யாமல் இந்த வழக்கில் தோன்றாதரப்பினர்களாகிவிட்டு பங்கு கோராமல் இருப்பதற்கு காரணம் நஞ்சுக்குட்டிக்கு எனது தகப்பனார் நியாயமாக கொடுக்கப்பட்ட பாகத்தினால்தான் என்றால் சரியல்ல. 01.09.2022 ம் தேதியில் நஞ்சுக்குட்டி எழுதிக் கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் சட்டப்படி செல்லக்கூடியது என்றால் சரியல்ல.

நஞ்சுக்குட்டி மீதோ அவரது வாரிசுகள் மீதோ காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. பிராதில் கூறியுள்ளவாறு நஞ்சுக்குட்டி மீதோ அவரது வாரிசுகள் மீதோ ஆவணம் மோசடி செய்திருந்தால் புகார் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. பிராதில் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது பிராது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை - இல்லை</u>

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

Sd/-K.Palanivel,

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.